[1975 மார்ச் 6

வடபெரும்பாக்கத்திற்கு நீர் வழங்கும் திட்டம்

* 220 வினா—திரு. மா. வே நாராயணசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் ஒன்றியத்தைச் சார்ந்த வடபெரும்பாக்கம் கிராமம் அரிசன மக்களுக்கு நலத்துறை வாயிலாக குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) & (இ) மாதவரம் ஒன்றியத்தைச் சார்ந்த வடபெரும்பாக்கம் கிராமம் அரிசன மக்களுக்கு நலத்துறை மூலமாக குடிநீர் வழங்க செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

B. T. Assistants

* Q. 201.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether the Government propose to allow the B.T. Assistants in Government Schools who have not studied Tamil in Part II in the Degree Courses to appear for Part II Tamil in degree Examinations as private teacher candidates?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசுப் பள்ளி களில் உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பல்கலைக் கழக விதிமுறை களைப் பொறுத்து பட்டப் படிப்பில் மொழிப் பகுதியில் தேர்வு எழுத வேண்டுமென்றும் இது குறித்து ஆய்வு செய்யுமாறும் சென்னை, மதுரை பல்கலைக் கழகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக் கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இப்படி அவர் களுக்கு விதிவைக்காத காரணத்தினால் தனியாக அவர்கள் பரிட்சை எழுதுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுமா? இந்த ஆண்டிலாவது, ஜூலையில் ஆரம்பிக்கக் கூடிய ஆண்டிலாவது வாய்ப்பு கொடுக்கப் படுமாவென்பதை அறிய விரும்புகிறேன்.